செ.கு.எண் :- 146 நாள் : 24.10.2011.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா**

**அவர்களின் அறிக்கை - 24.10.2011**

சென்னைப் பெருநகர காவல், தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு சார் ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு ஜெயச்சந்திரன் அவர்கள், 22.10.2011 அன்று காவல் பணியில் ஈடுபட்டிருந்த போது, நெஞ்சு வலி ஏற்பட்டு, ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலன் அளிக்காமல் உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து நான் மிகுந்த துயருற்றேன்.

திரு ஜெயச்சந்திரன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையாற்றிக் கொண்டிருந்த போது காலமான சிறப்பு சார் ஆய்வாளர் திரு ஜெயச்சந்திரன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9